(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(5).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 மார்ச்சு 09, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 மே 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0850/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், நகரசபைகள் என்பவற்றில் வீதி நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அனைத்து வகையான வீதி வகைகளுக்குமென மேற்படி மூன்று அமைப்புகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் செலவீனத்தையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இல் குறிப்பிட்ட வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கான நிதி மூலங்களையும்;

(ii) அது ஒரு கடன் மூலதனம் எனின், கடன்பெறும் செலவீனம் மற்றும் கடன்வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்களின் பெயர்களையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட வீதி நிர்மாணங்களுக்கென அரசாங்கம் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்திய பணத்தொகையை அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1272/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் உள்ள மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற 3174 அழகியல் கலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அழகியல் கலை பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதென்பதையும்;

(ii) அதன் படி நடத்தப்பட்ட எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறிய எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் இதுவரை அழகியல் கலைப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த ஆசிரியர் நியமனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதிருக்கும் அனைத்து அழகியல் கலை ஆசிரியர் வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படாவிட்டால், மீதி அழகியல் கலைப் பட்டதாரிகளுக்கு எப்போது நியமனங்கள் வழங்கப்படும் என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1675/ '11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிர்மாணத் துறையில் நடைமுறைப் படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைத்துள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்;

(iii) நிர்மாணத் துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) இவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1797/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இத்தாலியில் தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களது சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதி கழிக்கப்படுதல், வரி அறவிடுதல் உள்ளிட்ட ஏனைய அறவீடுகள் அந்நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அறவிடப்பட்ட முழுத் தொகை அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு தொகை இற்றைவரையில் எமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், இலங்கை ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கி, நாடு திரும்புகையில் அந்நாட்டு அரசாங்கம் அவர்களுக்கு ஏதேனும் பணத்தொகையை வழங்குகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நீண்ட காலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடுவதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1917/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) க/ வெவிட்ட மைத்திரி மகாவித்தியாலயம் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2050/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் கண் நோயாளர்களுக்கு அம்பாந்தோட்டை நகரில் தனியார் கண் பரிசோதனை நிலையங்களில் மூக்குக் கண்ணாடி மற்றும் விழி ஒட்டு வில்லைகளை பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அறிவுரை வழங்குகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்கள் விழி ஒட்டு வில்லைகளை கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றன என்பதையும்;

(iii) வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் செயலால் அப்பாவி நோயாளர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண் சிகிச்சைப் பிரிவில் நிலவும் மேற்படி நிலைமை குறித்து விஷேட விசாரணையை நடத்தி ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வைத்தியசாலையில் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கைக்கு அமைவாக கண் நோயாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூக்குக்கண்ணாடிகளையும் விழி ஒட்டு வில்லைகளையும் அரச மருந்தகத்தில் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பாரா என்பதையும்;

(iii) அரச மருந்தகத்தினால் வழங்கப்படும் விழி ஒட்டு வில்லைகளை பயன்படுத்தி நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வைத்தியசாலை அதிகாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) இதனுடன் தொடர்புடையதாக பிரச்சினைகள் தோன்றுமெனில் வைத்தியசாலையும் அரச மருந்தகமும் ஒன்றிணைந்ததான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2146/ '11

கௌரவ வை.ஜி.பத்மசிறி,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 1000 பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 5000 முதனிலை ஊட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளதால், அந்த கருத்திட்டத்துக்கு ஏற்புடைய வகையில் உத்தேசிக்கப்பட்ட ஊட்டப் பாடசாலைகளுக்கு அருகாமையில் உள்ள இரண்டு சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்கள் (பாலர் பாடசாலைகள்) வீதம் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(ii) அவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்களுக்கு தகுந்த பயிற்சி பாடநெறிகளை வழங்குவாரா;

(iii) மேற்படி சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களுக்கு தேவையான பௌதீக வசதிகளை வழங்குவாரா

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2233/ '12

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள், அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட 28/2010ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஆகியவற்றிற்கிணங்க இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ள ஆசிரியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் திருத்தியமைக்கப்படாமல் இருப்பதையும்;

(ii) ஆசிரியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுக்கிணங்க அவர்கள் சரியான சம்பளப் படிநிலைகளில் இற்றைவரை அமர்த்தப்படாமல் இருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பளங்ளைத் திருத்தியமைத்தல், ஆசிரியர்களை சரியான சம்பளப் படிநிலைகளில் அமர்த்துதல் ஆகியவை பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கும் ஏதாவது சுற்றறிக்கை வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், ஆசிரியர்களின் சம்பளங்களைத் திருத்தியமைத்தல் பற்றிய சூழ்நிலையைச் சீராக்குவதற்கு அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1641/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாரியதொரு நீர்ப்பாசன திட்டமான புத்தள, மாளிகாவில, சத்தாதிஸ்ஸ வாவியின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பத்தொன்பது வருடங்கள் முடிவடைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தின் கீழுள்ள பயிர்ச்செய்கைக் காணிகள் இதுவரை, விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) பல சந்தர்ப்பங்களில், காணிகளை வழங்குவதற்காக காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு, தகுந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காணிகளை வழங்குவதற்காக விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி விவசாயிகளுக்கு காணிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு காணிகள் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1709/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இடம் பெறும் முறைகடந்த மீன்பிடித்தலை அமைச்சினால் தீர்க்க முடிந்ததா என்பதையும்;

(ii) தற்போது இலங்கை தடுத்து வைத்திருக்கும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கையினையும், இந்தியா தடுத்து வைத்திருக்கும் இலங்கை மீனவர்களின் எண்ணிக்கையினையும்;

(iii) கச்சதீவில் மீன்பிடி நடைபெறுகின்றதா என்பதையும்;

(iv) கச்சதீவில் மீன்பிடித்தலைத் தடைசெய்தல் தொடர்பாக இலங்கை மீது நியாயமற்ற முறையில் விடுக்கப்பட்ட கோரிக்கை தீர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) இந்த மீனவர்கள் கடலிலே தாம் இருக்கும் இடத்தினை அறிந்து கொள்வதற்காக அவர்களின் மீன்பிடிக் கலங்கள் GPRS வசதிகளைக் கொண்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட மீனவர்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) கடந்த 5 வருடங்களாக, தொழிலுக்குச் செல்கையில் காணாமல் போயுள்ள மீனவர்களின் எண்ணிக்கையினை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1907/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய தொலைக்காட்சிக்குச் சொந்தமான, விளையாட்டுப் போட்டிகளை ஒளிப்பதிவு செய்துள்ள நாடாக்களை அல்லது இருவட்டுகளை கால்ரன் விளையாட்டு அலைவரிசைக்கு (CSN) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்குவதற்கான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகள் வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நாடாக்களை பெற்றுக்கொள்வதற்காக கால்ரன் விளையாட்டு அலைவரிசை தேசிய தொலைக்காட்சிக்கு செலுத்திய பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கால்ரன் விளையாட்டு அலைவரிசையினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை பெற்றுத் தரும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பின் மேற்படி வேண்டுகோளை விடுத்தவரின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வேண்டுகோள் கடிதம் யாதென்பதையும்;

(iii) தேசிய தொலைக்காட்சியினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கிய உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1918/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பண்டாரகம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மற்றும் அதுனுடன் இணைந்த கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து கடன் பெற்று, 2011.05.01 ஆந் திகதியாகும் போது அக் கடனை செலுத்தத் தவறியுள்ளவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவரினாலும் செலுத்தப்படாததுள்ள பணத் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) செலுத்தத் தவறியுள்ள மேற்படி கடன் தொகையை மீள அறவிடுவதற்காக பண்டாரகம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1642/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக் கல்விக் காரியாலயத்துக்குரிய கா/அகுலுகல்லை கனிஷ்ட பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதனால், அப்பாடசாலைக்குச் சொந்தமான பாரியளவு பௌதீக வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்காவிடின், அதனை வேறு பொருளாதார நடவடிக்கைகாக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில்,அப்பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1710/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இலங்கைக் குடும்பம் ஒன்றின் சம்பாதிக்கும் இயலுமையையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் அவர் கூறுவாரா?

(இ) இலங்கையில் வறுமைக்கோட்டுக்கு வருவதை தீர்மானிக்கும் காரணி என்ன என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1926/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) உலக மரபுரிமையான சிங்கராஜ காட்டை ஊடறுத்து வீதியொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வீதி சிங்கராஜ காட்டுக்குரிய நிலப்பரப்பில் ஆரம்பமாகின்ற மற்றும் முடிவடைகின்ற இடம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதி சிங்கராஜ காட்டிற்கு குறுக்காக எவ்வளவு தூரத்திற்கு செல்கின்றது என்பதையும்;

(iv) வீதியின் அகலம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வீதியை அமைப்பதற்கு அனுமதியளித்த அதிகாரி யாரென்பதையும்;

(ii) சிங்கராஜ காட்டின் ஊடாக வீதியொன்றை அமைப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) அபிவிருத்தியெனும் பெயரில் உலக மரபுரிமையாகிய சிங்கராஜ காட்டினுள் நிர்மாணிப்புகளை மேற்கொள்கின்றபோது இதற்கு ஏற்படுகின்ற பாரிய அழிவிற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 மே 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0851/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் உள்நாட்டு அரிசி நுகர்வையும்;

(ii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான உத்தேசிக்கப்பட்ட நுகர்வையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 பெப்ரவரி மாதத்தில் 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த அரசாங்க நிறுவனங்களின் பெயர்களையும்;

(ii) அவ் இறக்குமதிக்கான நிதி மூலத்தையும்;

(iii) மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை விற்பனை விலை, விற்பனை செய்யப்பட்ட அளவு கையிருப்பில் உள்ள அளவு ஆகியவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 65/- இற்கு மேற்பட்டதாக இருக்கையில் மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அண்ணளவாக 30,000 மெற்றிக் தொன் அரிசி தனியார் துறையினருக்கு கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 31 எனும் விலையில் 2010, செத்தெம்பர் மாதத்தில் விற்கப்பட்டதையும்;

(ii) தனியார் வர்த்தகர்கள் அவ் அரிசியை உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்கம் வலியுறுத்தியிருந்த போதும் அவர்கள் அதை விற்பனை செய்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்கூறியவாறு அரிசியை விற்பனை செய்த தனியார் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1273/ ’11

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பிற்றபெத்தர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கதுருவான தேயிலை தொழிற்சாலை ஆறு வருடங்களாக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தேசிய வளமொன்றாக உள்ள அத்தொழிற்சாலை பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதனால் தேசிய பொருளாதாரத்துக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தேயிலைத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக செலவான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அது பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேசத்திலுள்ள தேயிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வதற்கான முறைமையியல் ஒன்று வகுக்கப்படுமா என்பதையும்;

(iv) உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமாயின், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1683/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1728/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக்கேட்பதற்கு,— (2)

(அ) (i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறமுகம் நிர்மாணிக்கப்பட்டமையால் வீடுகளை இழந்தோரின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களுக்கு நட்டஈடுத் தொகை வழங்கப்பட்டதா;

(iii) அவ்வாறாயின் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்கின்றபோது வீடுகளை இழந்தோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின் இவ்வீடுகளை நிர்மாணித்த கம்பனி யாது;

(iii) இக்கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாது;

(iv) ஒவ்வொரு வீட்டினதும் பரப்பளவு மற்றும் நிர்மாணிப்பதற்கு செலவாகிய பணத் தொகை யாது;

(v) அமைக்கப்பட்ட வீடுகள் வெடிப்புக்களுக்கும் மூழ்குதல்களுக்கும் உள்ளாகியுள்ளதா;

(vi) அவ்வாறாயின் இந்நிலைமையை சீர்செய்ய மேற்கொள்ளப்படும் தீர்வுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1775/ '11

கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காலி மஹமோதர வைத்தியசாலையில்,

(i) தொழிற்படு நிலையிலுள்ள வாட்டுகள் மற்றும் ஏனைய பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) சுனாமி பேரிழிவினால் ஏற்பட்ட சேதங்கள் யாவையென்பதையும்;

(iii) நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதற்குப் பொருத்தமான நிலைமை உள்ளதா என்பதையும்;

(iv) தற்போதைய இடத்தை மாற்றுவதற்கு தீர்மானித்திருப்பின் இதற்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கராபிட்டிய வைத்தியசாலைக்கு அண்மையில் மகப்பேற்று மற்றும் சிறுவர்களுக்கான வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும், தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) வைத்தியசாலை திட்டமிடலின் பிரகாரம் அதில் அடங்கியுள்ள பிரிவுகள் பற்றிய விபரம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு,

(i) பணம் வழங்கிய அல்லது வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற நபர்கள் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(ii) தற்போது வழங்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) பணம் செலவழிக்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) செலவழிக்கப்படாது எஞ்சியுள்ள பணத்தொகை மற்றும், அப்பணத்தொகை செலவழிக்கப்பட்ட கருமங்கள் யாதென்பதையும்;

(v) தற்போது அரச நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பின் அப்பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிக்கின்றபோது நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பாக விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1909/ '11

கௌரவ ரஞ்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற பெரும்பாலான ஊழியர்களுக்கு அந்நாடுகளில் அமுலில் உள்ள ஷரிஆ சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான அறிவு இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக, வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடும்போது இவர்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய கிழக்கு நாடுகளின் சட்டங்கள் தொடர்பில் அறிவின்மை காரணமாக அந்நாடுகளின் சட்டங்களின் கீழ் குற்றவாளியாக்கப்படுகின்ற இலங்கை ஊழியர்களுக்கு சட்ட உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி மேற்படி ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அத்தகைய வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்ற திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1916/ '11

கௌரவ அஜித் பி.பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) க/ தொம்பகொட சீலரதன மகா வித்தியாலயம் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில் அப் பாடசாலையை குறிப்பிட்ட கருத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1927/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அளுத்கம முதல் காலி வரையிலான புகையிரத வீதியை திருத்தும் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) மேற்படி நிறுவனம் எந்த நாட்டிற்கு சொந்தமானது;

(iii) மேற்படி திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி புகையிரத வீதியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(v) மேற்படி புகையிரத வீதியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போது செலவாகுமென எதிர்பார்க்கப்படும் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அளுத்கம முதல் காலி வரையிலான புகையிரத வீதியின் திருத்தப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குகின்றபோது கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு கிடைத்த கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1643/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதுராவளை அரசாங்கப் பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தற்போது, மேற்படி பாடசாலைக்குரிய பல இலட்சம் ரூபாய் பெறுமதிவாய்ந்த கட்டிடங்கள் சிதைவடைந்து வருகின்றன என்பதையும்;

(iii) பிரதேசத்தின் சிறுவர் சிறுமியர்களுக்காக, மீண்டும் இப்பாடசாலையை திறந்து வைக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை திறக்காவிடின், வேறு பயனுள்ள பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்காக எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1687/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1711/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள விமானநிலையங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இலங்கை விமான சேவைகள் சட்டத்தின் பிரகாரம் தற்பொழுது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வானூர்திகளின் எண்ணிக்கையையும்;

(iii) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வானூர்தியின் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2006 இலிருந்து 2011 வரை பதிவு செய்யப்பட்ட விமானச் சேவை மூலம் அரசாங்கம் சம்பாதித்த வருமானம் எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2006 இலிருந்து 2011 வரை,

(i) இலங்கையிலுள்ள விமான நிலையங்கள் ஊடாக உள்ளே, வெளியே சென்ற பயணிகளின் எண்ணிக்கையையும்;

(iii) இவ்விமான நிலையங்கள் வழியாக கொண்டுசெல்லப்பட்ட சரக்குகளின் அளவையும்

அவர் கூறுவாரா?

(ஈ) 2006 இலிருந்து 2011 வரை விமான நிலையங்கள் மூலம் அரசாங்கம் சம்பாதித்த வருமானம் எவ்வளவு என்பதை அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1928/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் இற்றைவரை மகநெகும இயந்திரோபகரண நிறுவனத்தின் தவிசாளர் பதவியில் பணியாற்றியவர்களின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு தவிசாளரினதும் சேவைக்காலம், அவர்கள் பெற்ற சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மகநெகும இயந்திரோபகரண நிறுவனத்தில் 2005 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை சேவையாற்றிய நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அந்நிறுவனத்தில் இருந்து நீக்கப்பட்ட நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) நீக்கப்பட்ட நிரந்தர ஊழியர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிகள் யாவை;

(iv) அவ்வூழியர்கள் நீக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2006 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றிய அமய ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களில் சேவை நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நீக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1644/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள நாகொட கனிஷ்ட வித்தியாலயம் மூடப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) தற்சமயம், மேற்படி பாடசாலைக்குரிய கட்டிடங்கள் பற்றைக்காடுகள் வளர்ந்து, சிதைவடைந்து வருவதென்பதையும்;

(iii) நகரில் காணப்படும் பிரபல பாடசாலைகளின் இடநெருக்கடியை குறைப்பதற்காக மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதாயின், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(ii) இன்றேல், இப்பாடசாலையின் வளங்களை வேறேதேனும் பயனுறுதியான பொருளாதார நோக்கத்திற்காக உபயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி பொருளாதார நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பொருளாதார நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1712/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2009 இலிருந்து இற்றைவரைக்கும் உரிய கேள்விப்பத்திரம் கோரல் செயன்முறைகள் இல்லாமல், வேறுபட்ட பயன்படுத்துனர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள 50 பேர்ச்சை விட விசாலமான காணிகளை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) பயன்படுத்துனர்களுக்கு அக்காணிகளை இவ்வாறு கொடுத்தமைக்கான காரணங்களையும்;

(iii) அ(i) இன் பிரகாரம் கொடுக்கப்பட்ட அக்காணியின் பயன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையையும்;

(iv) கொடுக்கப்பட்ட அக்காணிகளின் பயன்பாட்டின் மூலம் நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளையும்;

(v) மேற்படி காணிகளைக் கொடுக்கும் செயன்முறையில் விலக்களிக்கப்பட்ட வரியின் மொத்த தொகையையும்;

(vi) இக்காணிகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கேள்விப்பத்திரம் கோரல் நடைமுறைகள் ஏன் பின்பற்றப்படவில்லை என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1930/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மகநெகும இயந்திரோபகரண கம்பனி தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கம்பெனியின் பங்குரிமையாளர்கள் யாவர் என்பதையும்

(iii) ஒவ்வொரு பங்குரிமையாளரும் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை யாது எனபதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மகநெகும இயந்திரோபகரண கம்பனி ஆரம்பிக்கப்படுகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அல்லது அப்போது அதனால் நிருவகிக்கப்பட்ட கம்பெனியிலிருந்து மற்றும் அது சார்ந்த கம்பனிகளிலிருந்து இயந்திர உபகரணங்களோ அல்லது பிற மூலதனங்களோ பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பெறப்பட்டவை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 மே 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0989/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்காக வெளிநாடுகளில் பணியாற்றுவதற்காக பொது உறவுகள் கம்பனிகளுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒப்பந்தம் செய்து அல்லது அவற்றை அமர்த்தியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவற்றுடன் எப்போது ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) அவை விலைமனு கோரல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனவா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்பட்டது என்பதையும்;

(vi) இக்கம்பனிகளுக்கு மாதமொன்றுக்கு செலுத்தப்படும் தொகையை இலங்கை ரூபாவிலும்;

(vii) அவற்றின் சேவையால் கிடைக்கப்பெற்ற நன்மை என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டில் பணிபுரிவதற்காக மேலும் பொது உறவுகள் கம்பனிகள் பணிக்கு அமர்த்தப்படுமா என்பதையும்;

(ii) இலங்கைக்காக பணியாற்றும் அமெரிக்காவில் உள்ள குர்விஸ், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பெல்பொடெஞ்சர், இந்தியாவில் உள்ள லெக்சிகன் ஆகிய நிறுவனங்களினால் ஆற்றப்படும் பணிகள் யாவை என்பதையும்;

(iii) இந்தக் கம்பனிகளின் உரிமையாளர்களையும்;

(iv) வெளிநாட்டுக் கொள்கை வகுப்பதிலும் அந்தக் கம்பனிகள் ஈடுபட முயற்சிக்கின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்கண்டவாறு வெளி நிறுவனங்களுக்கு அவர்களின் கடமைகளில் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பதன் நிமித்தமாக அமைச்சு பணியாட்கள் ஊக்கம் குன்றிப்போவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1289/ '11

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுமார் 17 கிராமங்களுக்கு தபால் வசதிகள் இல்லாமையினால் அப்பிரதேச மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) அப்பிரதேசத்தின் தொலை தூர கிராமங்களில் தபால் அலுவலகங்கள் இருக்கின்ற போதிலும், அவற்றில் சேவையாற்றும் தபால்காரர்களின் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நிலைமையை போக்கி அப்பிரதேச மக்களுக்கு வினைத்திறன் மிக்க தபால் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக வழிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வழிமுறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1979/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை எம்பிலிபிட்டிய கடுதாசித் தொழிற்சாலைக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் யாவையென்பைதயும்;

(ii) தற்போது இந்நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இந்நிறுவனம் பெற்ற இலாபம் அல்லது அடைந்த நட்டம் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எம்பிலிபிட்டிய கடுதாசித் தொழிற்சாலையை தனியார்மயப்படுத்துவதற்கு அல்லது வேறேதேனும் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதன் பொருட்டு கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இக்கேள்விப்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனம் தனியார் துறைக்கு ஒப்படைக்கப்படுமெனின், அதனை ஒப்படைக்கவுள்ள பணத் தொகை மற்றும் காலகட்டம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2002/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புத்தளம் கற்பிட்டி வீதியின் 7 ஆம் மற்றும் 9 ஆம் மைல் கல்களுக்கிடையிலுள்ள நெடுஞ்சாலைக்கும் புத்தளம் கடனீரேரிக்கும் இடையே அமைந்துள்ள நிலப்பகுதியிலிருந்த கண்டல் தாவர நடுகைகளை சிலர் அழித்துள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கண்டல் தாவர நடுகை அமைந்திருந்த நிலப்பகுதி ஏதேனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குகின்றவர்கள் யாரென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்குரிய நிலப்பகுதியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக பெறப்பட்டுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(v) வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச் சட்டங்களுக்கு அமைவாக மேற்படி கருத்திட்டத்திற்கு பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்டதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2058/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) முகாமைத்துவச் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையினால் பொறுப்பெடுக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஊ.சே.நிதியத்தின் நிதி முகாமைத்துவம் நிதிச் சபையின் அங்கீகாரத்துடன், முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் பிரகாரம், முதலீட்டுக் குழுவின் பணிப்பில் நடத்தப்படுகிறதா என்பதையும்;

(ii) ஊ.சே.நி. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ய ஒழுங்குக் கிரமமாக முதலீட்டு சபை கூடுகிறதா என்பதையும்;

(iii) ஊ.சே.நி. முதலீட்டுக் கொள்கையின் பிரகாரம் முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான முதலீட்டுக் குழு கூட்ட அறிக்கைகள் சபாபீடத்தில் இடப்படுகின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கடந்த இரண்டு வருடங்களாக முதலீட்டுக் குழு தொடர்பாக,

(i) அதன் எல்லா உறுப்பினர்களினதும் பெயர், நியமனத்திகதி ஆகியவற்றையும்;

(ii) கூட்டம் நடந்த திகதிகளை சமூகமளித்த உறுப்பினர்களின் பெயர்களுடனும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1645/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலியத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பெலியத்த பொது வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யாமையினால் இப்பிரதேச விவசாய குடிமக்கள் தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக எடுக்கும் கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1713/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கற்கைகளின் ஆரம்பத்திலிருந்து அது பூர்த்தி செய்யப்படும் வரைக்கும் வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் எல்லா வடிவங்களிலுமான ஏனைய உதவிகள் மற்றும் நன்மைகளின் பெறுமதியை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படி நிதி மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொண்ட மற்றும் பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(iii) 2008, 2009, 2010, மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அரச பல்கலைக்கழகங்களிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(iv) 2008, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்களின் உள்ளீர்ப்பை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1981/'11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சம்பவங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி காலகட்டங்களில் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வல்லுறவுகளில் ஈடுபட்ட நபர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவை தடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1646/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் அமைந்துள்ள அக்மீமன கொட்டகொட அத்ததஸ்ஸி கனிஷ்ட வித்தியாலயத்தின் கூரை புனரமைப்புச் செய்யப்பட்டு நீண்ட நாட்கள் கழிவதற்கு முன்னரே சேதமடைந்திருப்பதென்பதையும்;

(ii) கூரையின் நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்தகாரர் தரக்குறைவான வெட்டுமர வகைகளை உபயோகித்தமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் கூரை புனரமைப்புச் செய்யப்பட்ட காலகட்டம் யாதென்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கூரையை நிர்மாணிப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரர் அல்லது ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலையின் கூரை சேதமடைந்துள்ளமை தொடர்பில் கிரமமான விசாரணையை நடத்தி ஒப்பந்தகாரர்களின் ஊடாக மீண்டும் கூரையை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1737/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரையில்,

(i) மொத்த பால் மா நுகர்வு மற்றும் தனி நபருக்கான பால்மா நுகர்வு ஆகியவற்றை மாதாந்த, வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் அளவையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் பெறுமதியையும்;

(iv) அரசாங்கத்தினால் பால்மாவின் இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் பால்மா உற்பத்திக்காக ஏற்பட்ட செலவையும் எவ்வளவு என்பதையும்;

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால்மா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்ட சகல விதமான (நேரடி மற்றும் மறைமுகம்) வரிகளையும்

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1982/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இச்சம்பவங்களுக்கான காரணங்கள் யாவை;

(iv) துஷ்பிரயோகங்களுக்கு இலக்கான சிறுவர் சிறுமியர் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(vi) குறித்த துஷ்பிரயோகங்களை மேற்கொண்டவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(vii) சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(viii) இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2012 மே 11 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0976/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கோல்டன் ரிலிப் ரிசோசஸ் நிறுவனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஒப்பந்தகாரராக பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பதிவு எந்த ஒப்பந்தக்காரர் தரத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கம்பனியினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0991/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பெருந்தோட்டக் கம்பனிகள் எப்போது தனியார்மயப்படுத்தப்பட்டன என்பதையும்;

(ii) அப்போது பதவியிலிருந்த அரசாங்கம் எது என்பதையும்;

(iii) பெருந்தோட்டக் கம்பனிகள் தனியார்மயப்படுத்தப்பட்ட போது சனாதிபதியாக இருந்தவரின் பெயரையும்;

(iv) தனியார்மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனியின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பெருந்தோட்டக் கம்பனியும் விற்கப்பட்ட விலை என்ன என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் நூற்று வீதத்தை கம்பனிவாரியாக யாதென்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) (i) அரசாங்கம் தேசியமயமாக்கல் கொள்கையை பின்பற்றுகின்றமையால், தனியார்மயப்படுத்தப்பட்ட தோட்டத்தொழில் முயற்சிகளை அது மீளப்பெற்றுக்கொள்ளுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், எப்போது அவை மீளப் பெற்றுக்கொள்ளப்படும் என்பதையும்;

(iii) அவ்வாறில்லலையாயின், அவை ஏன் மீளப்பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1300/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய கல்வி வலயத்துக்கு உரித்தான கா/பிட்டிகல மஹா வித்தியாலயம் இற்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்னர் சகல வசதிகளையும் கொண்ட மஹா வித்தியாலயமாக பிரபல்யமடைந்திருந்தது என்பதையும்;

(ii) சில வருடங்களுக்கு முன்னர் மேற்படி பாடசாலை மூடப்பட்டதால் அதற்குரித்தான சுமார் பத்து கட்டடங்கள் தற்போது அழிவடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதி வசதிகளைக் கொண்ட பிரதேசத்தில் காணப்படுகின்ற மேற்படி பெறுமதிமிக்க வளத்தை மீண்டும் பாடசாலையாக மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iii) பாடசாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வேறு பயன்மிக்க நடவடிக்கைக்கு மேற்படி கட்டடத்தையும், ஏனைய வளங்களையும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி கட்டடங்களை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பணி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1647/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் முந்நல் பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொட்டந்தீவு கிராமிய வைத்தியசாலை திறக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு நோயாளியும் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படவில்லையென்பதையும்;

(ii) வைத்தியசாலை திறக்கப்பட்ட போதிலும் பௌதீக வளமும் மனித வளமும் உரிய வகையில் பெற்றுக்கொடுக்கப்படாமையால் இந்நிலை தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனின், இப்பிரதேச மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1738/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரையில்,

(i) பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவற்றின் நுகர்வு மற்றும் தனிநபர் நுகர்வு ஆகியவற்றை மாதாந்த, வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயத்தின் அளவையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் பெறுமதியையும்;

(iv) அரசாங்கத்தினால் வெங்காய இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெங்காய உற்பத்திச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்ட சகல விதமான வரிகள் (நேரடி மற்றும் மறைமுகம்) எவ்வளவு என்பதையும்;

(iii) நாட்டில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் எத்தனை குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன என்பதையும்

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1983/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அத்தனகல்ல தொகுதியில் போபகம சந்தியிலிருந்து நடுவத்த சந்தி வரையிலான பாதை, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானதா என்பதையும்;

(ii) இன்றேல், அப்பாதை மாகாண சபைக்கு உரியதா என்பதையும்;

(iii) அப்பாதையின் நீளம் யாது என்பதையும்;

(iv) குறித்த பாதையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பகுதியின் நீளம் மற்றும் அதன் அகலம் யாது என்பதையும்;

(v) குறித்த பாதையை காபட் இடுவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாதையின் நிர்மாணப் பணிகளைக் கையளிக்கையில் கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரத்தினதும் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) பாதையின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர், அதன் பணிப்பாளர் சபை அங்கத்தினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1648/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலாளர் பிரிவின் பாலம் முகாம் பிரதேசத்தில் இலங்கை முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான ஏறக்குறைய இரண்டு ஏக்கர் காணி முழுவதிலும் நிர்மாணிக்கப்பட்டுவந்த கட்டடத்தின் நிர்மாணிப்புகள் இடைநடுவில் கைவிடப்பட்டு சுமார் பதினைந்து வருடங்கள் கழிந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கட்டடத்தின் நிர்மாணிப்புப் பணிகளை பூர்த்திசெய்து அங்கு பொருத்தமான தொழிற்சாலையொன்றினை ஆரம்பித்து அப் பிரதேசத்தில் வாழும் மக்களின் தொழில் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஏற்கெனவே அதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பின் அக்கட்டடத்தைப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ள கருத்திட்டம் யாதென்பதையும்;

(iii) அப்பணிகளை ஆரம்பிக்க எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1739/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை வருடாந்த அடிப்படையில்,

(i) உருளைக்கிழங்கின் மொத்த மற்றும் தலாவீத நுகர்வையும்;

(ii) உருளைக் கிழங்கின் மொத்த உள்ளூர் உற்பத்தி மற்றும் தலாவீத உற்பத்தி ஆகியவற்றையும்;

(iii) இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் உருளைக் கிழங்கு இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு என்பதை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்கின் உற்பத்திச் செலவையும்;

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் உருளைக் கிழங்கிற்கு விதிக்கப்பட்ட சகல விதமான வரிகளையும் (நேரடி மற்றும் மறைமுகம்)

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1984/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால், தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை ஆரம்பிக்கின்றபோது அரசாங்கம் அறவிடுகின்ற பணத்தொகை யாது;

(ii) புதிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களை ஆரம்பிப்பதற்காக தற்போது கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை ஆரம்பிப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.7/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.8/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக “தரப் பாதுகாப்பு பேரவையொன்றை” சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ‘விசேட வழக்குத் தொடுநர்’ எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்திறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு “விசேட வழக்குத் தொடுநர்” எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ '10

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ ’10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,– பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 71/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ '10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ '10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பதிரன,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரன,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பதிரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பதிரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பதிரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பதிரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பதிரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பதிரன,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பதிரன,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கணனி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/ '10

கௌரவ புத்திக பதிரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பதிரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பதிரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பதிரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்களின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.126/ ' 11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்காக "சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்" ஒன்றைத் தாபித்தல்,— மும்மொழி பேசப்படும் இலங்கைக்கான பத்தாண்டு தேசிய மூலோபாயச் சட்டகம் ஒன்றை வகுத்தலானது, தேசிய ஒருங்கிணைப்புக்கும் சமூக ஒற்றுமைக்குமான ஒரு திருப்புமுனை நடவடிக்கையாக அமையுமெனவும் எனவே சிங்கள மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் குறுகிய கால வளமளித்தல் நிழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுடன் "சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்" ஒன்றில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பறிமாறிக்கொள்வதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு கல்வி அமைச்சும் தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.127/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.128/ '11

கௌரவ அஜித் குமார,— முன் பிள்ளைப் பருவக் கல்வி தொடர்பில் தேசிய திட்டமொன்றை உருவாக்குதல்,— எமது நாட்டில், பிள்ளைகளின் கல்வியில் முக்கிய இடம் வகிக்கும் முன் பிள்ளைப் பருவக் கல்வியை (முன்பள்ளிக் கல்வி) வழங்குவது தொடர்பில் தேசிய திட்டமொன்றை தயாரிக்கவேண்டியுள்ளதுடன், முன் பள்ளி நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சியும், ஆட்சேர்ப்பு முறைமையுடன் சம்பள முறையொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.129/ '11

கௌரவ அஜித் குமார,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய ஆய்வு நூலொன்றைத் தயாரித்தல்,— காலி மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்கள் பற்றிய பரந்த ஆய்வினை மேற்கொண்டு, அது தொடர்பில் அறிவியல் பெறுமதிமிக்க ஆய்வு நூலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.130/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.140/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தெங்குக் கமத்தொழில், தெங்கு சார் வளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் ஒழுங்கமைத்தல்,— வர்த்தக ரீதியான உற்பத்திகளில் தென்னை முக்கிய இடத்தை வகிப்பதால், வளங்களையும், சுற்றாடலையும் நிலைத்து நிற்கச் செய்கின்ற அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடக்கூடியளவு பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தில் வளர்ச்சியடையும் அபிவிருத்தியை ஒழுங்கமைத்து தென்னைக் கைத்தொழில் மற்றும் தென்னை சார் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்த்த புஷ்டியுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/11

கௌரவ திலங்க சுமதிபால,— ஆயுத விற்பனைக்கான முறைசார்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றைத் தாபித்தல்,— சர்வதேச ரீதியில் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆயுத விற்பனை நடைமுறையிலுள்ளதன் விளைவாக இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் வந்து குவிதல் மற்றும் அவ்வாறான நாடுகளில் இடம்பெறும் முறைசாராத ஆயுதச் சுற்றோட்டமானது சமூகத்தின் சுதந்திரத்திற்கு பாரிய தடையாகவும் சனநாயக ரீதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தாக்கம் ஏற்படுத்துவதாகும், அத்துடன் நாட்டில் போதைப்பொருள் மற்றும் விபச்சாரத் தொழில் போன்ற சட்டவிரோதச் செயல்கள் விரிவடைவதற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. மேற்படி நிலைமைகளைத் தடுத்து ஒழுக்கம் பேணுகின்ற, சட்டத்தை மதிக்கின்ற, விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புதல் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் எதிர்பார்ப்பாக உள்ளதாலும், ஆயுத விற்பனை உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக சமூக போராட்டங்களைக் குறைத்து சமூக நலனோம்புகையை உறுதி செய்தல் இன்றைய உலகின் எதிர்பார்ப்பாகவுள்ளதாலும், மேற்குறிப்பிட்ட துர்நடத்தைகளை ஒழிப்பதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கு ஏற்புடையதாக தேசிய சட்ட முறைமையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,— மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

## 2012 மே 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0993/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எரிவாயுக் கம்பனியானது எப்போது செல் கம்பனி லிமிடட்டிற்கு விற்கப்பட்டது என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் விலையையும் வீதத்தையும்;

(iii) எரிவாயுக் கம்பனியை விற்றபோது ஆட்சியிலிருந்த சனாதிபதியின் பெயரையும் அரசாங்கத்தையும்;

(iv) விற்ற திகதியிலிருந்து மீளக் கொள்வனவு செய்த திகதி வரையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தினையும்;

(v) செல் டேர்மினலிலே அரசாங்கம் கொண்டுள்ள பங்கினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல் கம்பனி லிமிடட்டின் பங்குகளை மீளவாங்குவதற்கு அரசாங்கம் செலுத்திய விலையினையும்;

(ii) அரசாங்கம் மீளவாங்கிய பங்குகளின் வீத்தையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட இந்த மீள் கொள்வனவு எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) விலைப் பெறுமதி குறித்து எவ்வாறு இணக்கம் காணப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1301/ '11

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை மற்றும் பெலிஅத்த ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையும் அண்மித்ததாக உள்ள நலகம வில்அத்தர எனும் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த நாமயால ஏரி அமைந்துள்ளது என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டில் மேற்படி ஏரியும், அதனைச் சூழவுள்ள காணிகளும் குடிநீர் கருத்திட்டமொன்றுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி இடத்தில் தங்காலை – பெலிஅத்த இணைந்த நீர் வழங்கும் திட்டம் எனும் பெயரில் நீர் கருத்திட்டமொன்றுக்காக 2005.10.05 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை மேற்படி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் கருத்திட்டத்தின் ஊடாக நீர் வழங்க திட்டமிடப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அதன் வேலைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நீர் வழங்கல் திட்டம் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக தகுந்த முறையியலொன்று தயாரிக்கப்படுமா?

(ii) அவ்வாறாயின், அது யாது?

(ஈ) இன்றேல், ஏன்?

1985/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரைலும் மற்றும் 2011ஆம் ஆண்டிலும் மதுபான விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மேற்படி உரிமப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மதுபான விற்பனைக்கான உரிமப்பத்திரங்களை வழங்குகையில் பின்பற்றப்படும் நடைமுறை யாது;

(iv) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில், மதுபான விற்பனை நிலைய உரிமப்பத்திரங்களை வழங்குதன் மூலம் அரசாங்கம் ஈட்டிய வருமானம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மதுபான விற்பனைக்காக உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதில் எதிர்காலத்தில் உரிமப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை யாது;

(iii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

1650/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்குறஸ்ஸ, அத்துரலிய பிரதேச சபையின் கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கிய நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) இதற்காக மதிப்பிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) அத்துரலிய கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1740/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஜூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) சீனியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் பெறுமதியையும்;

(v) சீனி இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் 1கிலோகிராம் சீனிக்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1 கிலோகிராம் சீனியின் மீது விதிக்கப்பட்ட எல்லா (நேரடி மற்றும் மறைமுக) வரிகளையும்

அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1986/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1651/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அட்டகலகம்பன்ன பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்கு உட்பட்ட ஹிரமடலகம மத்திய மருந்தகம் மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் பிரதேச மக்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) (i) புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரான நிலையில் இருந்த போதிலும் மேற்படி மருந்தகத்தை மூடிவிடுவதற்கு காரணமான விடயங்கள் யாதென்பதையும்;

(ii) மேற்படி மருந்தகத்தை துரிதமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1741/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஜூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) பருப்பின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் பெறுமதியையும்;

(v) பருப்பு இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில், 1 கிலோகிராம் பருப்பிற்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பருப்பு ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட (நேரடி மற்றும் மறைமுக) வரிகள் அனைத்தையும்

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1987/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு நிறுவனத்தினாலும் பாதுகாப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் தற்போது செலுத்தப்படும் பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் பாதுகாப்புக்காக செலவிடும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2012 மே 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0995/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குற்றவாளியென தீர்ப்புக்கூறப்பட்ட மக்களுக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும்;

(iii) விடுதலை செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட நியதிகளையும்;

(iv) விடுதலை செய்யப்பட்ட வேளையில் ஒவ்வொருவரும் தனது தண்டனைக் காலத்தின் எப்பகுதியை பூர்த்தி செய்திருந்தனர் என்பதையும்;

(v) கடந்த மூன்று வருடங்களில் சனாதிபதி அவர்களால் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஏதேனுமொரு அரசியல்வாதி அல்லது தொடர்புடைய நபர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1320/ '11

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் புத்தளம்—கற்பிட்டி வீதியின் ஆலங்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள காணிப் பதிவு அலுவலகத்தில் வரைபட இலக்கம் 2396 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஏறக்குறைய நானூறு ஏக்கர் காணி போலி உறுதி தயாரித்து பார் ரீப் ரிசோர்ட்ஸ் பிரைவேட் லிமிரெட் நிறுவனத்தினால் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது இக்காணியில் ஆலங்குடா எனும் பெயரில் சுற்றுலாத்துறை ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிக்கான போலி உறுதி தயாரிக்கப்பட்டு உரிமை பெறப்படும் வரை அது பற்றி அரசாங்க உத்தியோகத்தர்களை விசாரித்தறியாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த போலிக் காணிக் கொடுக்கல் வாங்கல் பற்றி முறையான விசாரணையொன்று நடாத்தி அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை மீளப் பெற அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) முறையான விசாரணை மேற்கொள்வதை ஆரம்பிக்கும் திகதி யாது என்பதையும்;

(iv) இதனோடு தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1988/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழு தற்போது செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அது செயலிழந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆணைக்குழுவுக்கு கட்டிட வசதிகள் பெற்றுக் கொடுப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின் மேற்படி இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் யாரென்பதையும்;

(iv) மேற்படி கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் மாதாந்த வாடகை எவ்வளவென்பதையும்;

(v) நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களது சம்பளங்ளுக்காக மாதாந்தம் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்த நாள் முதல் இன்று வரை இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

1652/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1742/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஜுலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) அரிசியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களின் போது அரிசியின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியை வெவ்வேறாகவும்;

(iii) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் அரிசி இறக்குமதியாளர்கள், நெற்பயிற்செய்கையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் ஒரு கிலோகிராம் அரிசிக்கான உற்பத்திச் செலவையும்;

(ii) நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) இறக்குமதிசெய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசிக்கு விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2008/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் கிரிக்கட் அணி இலங்கைக்கு வருகை தந்த திகதியும் இலங்கையிலிருந்து வெளியேறிய திகதியும் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்துக்காக ஏதேனும் நிறுவனம் அல்லது நிறுவனங்களிலிருந்து வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனின், பெற்றுக்கொண்ட மேற்படி வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) (i) மேற்படி சுற்றுப்பயணத்தின் போது போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) இதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், விலைமனுக்கள் கோரப்பட்ட நிறுவனங்களுக்கு புறம்பாக வேறு நிறுவனங்கள் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1653/ '11

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் தலாவ பிரதேச செயலாளர் பிரிவின் கண்டகுளம் மற்றும் கதுறுகஸ்வெவ ஆகிய கிராமங்களுக்கு குடி நீர் வசதிகளை செய்து கொடுப்பதற்காக இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் சமுதாய நீர் வழங்கல் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சமுதாய நீர்வழங்கல் திட்டத்தின்,

(i) நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) நிர்மாணிப்புகளை பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள திகதி யாது என்பதையும்;

(iii) பூர்த்தி செய்வதற்கு செலவிட உத்தேசித்துள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்கு வெளிநாட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின், அந்நிதியை வழங்கிய நிறுவனங்கள் அல்லது நிறுவனம் யாது என்பதையும்;

(v) உள்நாட்டு நிதி பெறப்பட்டிருப்பின், அதற்காக பின்பற்றப்பட்ட முறைமையியல் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை துரிதமாக பூர்த்தி செய்து பிரதேச மக்களின் குடி நீர்த் தேவையை நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1743/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஜுலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2009/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரன்மிஹிதென்ன சினிமா கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்களை கொண்டுள்ளது என்பதையும்;

(ii) இக்கிராமம் திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) திறந்து வைக்கப்பட்ட திகதி முதல் இன்று வரை மேற்படி சினிமா கிராமம் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி நிறுவனத்திற்கு கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரன்மிஹிதென்ன சினிமா கிராமத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் அல்லது திரைப்படங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆக்கத்தினதும் இயக்குனர், தயாரிப்பாளர் அல்லது தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 மே 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1063/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1322/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் கரன்தெனிய தேர்தல் தொகுதியிலுள்ள அனுருத்தகம ஜன உதான கிராமம் 1999 ஆம் ஆண்டில் மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதையும்

(ii) இக்கிராமத்தில் பெரும்பாலான வீடுகளின் உரிமையாளர்கள் இதுவரை இவ்வீடுகளில் குடியிருப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வீடுகளில் குடியிருக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(இ) (i) அனுருத்தகம ஜன உதான கிராமத்தின் வீடுகள் தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடாத்தி பிரதேசதத்தின் வீடுகளற்ற வறிய குடும்பங்களுக்கு கைவிடப்பட்டுள்ள வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2020/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சிறைச்சாலைக் காவலர் – வகுப்பு இரண்டு மற்றும் நலனோம்புகை அலுவலர் – வகுப்பு இரண்டு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களுக்கு, குறித்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தற்போது ஆட்சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஆட்சேர்க்கப்பட்ட ஆகக் குறைந்த வெட்டுப் புள்ளி யாது என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(vi) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கு மேலதிகமாக வேறு ஆட்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vii) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1654/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு உரித்தான கங்கபளாத்த எச்.எம்.பீ. பண்டா ஞாபகார்த்த நூலகம் தற்போது சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நூலகக் கட்டடம் மறுசீரமைக்கப்படாமை காரணமாக கூரை, கதவுகள், யன்னல்கள் மற்றும் மின்சாரக் கம்பி முறைமை பெருமளவு சேதமடைந்துள்ளதென்பதையும்;

(iii) நூலகம் மூடப்பட்டுள்ளதனால் ஆயிரத்திற்கும் அதிகமான வாசகர்கள் புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பை இழந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) துரிதமாக மேற்படி நூலக கட்டடத்தை மறுசீரமைத்து வாசகர்களிடம் உரிமையை கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1744/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (இபெகூ) பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் நடவடிக்கைமுறையையும்;

(ii) மேற்படி நடைவடிக்கைமுறைக்கு அதிகாரமளிக்கும் முகவரையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியிலிருந்து ஜுலை மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் குறைந்த தரத்திலான பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பகட்டப் பரிசீலனையை குறைந்த தரத்திலான பெற்றோல் எவ்வாறு திருப்திப்படுத்தியது என்பதையும்;

(iii) அதைத்தொடர்ந்து அதன் தரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களில் அமையவில்லை என உறுதிசெய்வதற்கு அது எவ்வாறு மாற்றப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) குறைந்த தரத்திலான பெற்றோல் பாவனையின் காரணமாகப் பாதிப்படைந்த வாகனங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இம் மோசடியில் ஈடுபட்ட ஆட்களையும்;

(iii) மேற்படி மோசடி காரணமாக வரிசெலுத்துபவர்களுக்கு ஏற்பட்ட செலவினம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2021/ ' 11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதுள்ள முப்படை வீரர்களின் குடும்பங்களது எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2011 இன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவொன்றான படைவீரர்களின் குடும்பமொன்றில் பிறக்கின்ற மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கின்ற முன்மொழிவின் கீழ் இதுவரை மேற்படி கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்காக இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை முன்வைக்க முன்னர் மூன்றாவது குழந்தையொன்று இருந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் மேற்படி நலன் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதுவரை, மேற்படி கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின், அதனை வழங்குவதற்கு ஆரம்பிக்கின்ற திகதி யாது என்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவை வழங்குவதானது எவ்வளவு காலம் வரை அமுலிலிருக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1655/ ’11

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் பன்வில அலவத்துகிறிகமவில் அமைந்துள்ள கண்டி இராச்சிய காலகட்டத்திற்கு உரித்தான பண்டைய விஹாரையின் தொல் பொருட்கள் பல வருடங்களாக சேதமடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் மேற்படி தொல் பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்து பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இது வரை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விஹாரையை தொல் பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்கள் பரிசீலனை செய்துள்ள போதிலும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்டாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி விஹாரையின் மறுசீரமைப்பு பணிகள் எதிர்வரும் காலத்தில் ஆரம்பிக்கப்படுமாயின், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1745/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ)

(i) இலங்கையில் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டிக்கான செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட செயலாளரின் பெயரையும்;

(ii) மேற்படி நியமனம் யாரால் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) இந் நியமனத்திற்கு வேறு நபர்கள் எவரேனும் பரிசீலிக்கப்பட்டனரா என்பதையும்;

(iv) அவ்வாறெனின், அவர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) உலகக்கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டிக்கான செயலகத்தின் செயலாளர் பதவிக்கு வழங்கப்படடிருந்த தத்துவங்களையும்;

(ii) அப்பதவிக்குரித்தான அதிகாரங்களை அவர் நிறைவேற்றினாரா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2022/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கனேவத்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் கனேவத்த பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) காபட் இடப்பட்டு அல்லது வேறு விதத்தில் மறுசீரமைக்கப்படும் மேற்படி வீதியின் அகலம் மற்றும் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப்படவேண்டிய பாலங்களினதும் மதகுகளினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பொத்துவாகொன்ன வீதியை மறுசீரமைப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்படும் போது முறையான கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதி மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் நிலவிய அகலம் எவ்வளவென்பதையும்;

(ii) வீதியை நிர்மாணித்து முடித்ததன் பின்னர் இதற்காக செலவாகிய மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 மே 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1064/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1327/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கண்டி மாவட்டத்தின் பொத்தபிட்டிய வீதியில் மெனித்தவேலவில் இருந்து திஸ்மட வரையான பகுதியைப் புனரமைக்கும் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு ஏறக்குறைய ஒரு வருடகாலம் கழிந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(ii) மேலே உள்ளவாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்படக் காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்து பகுதிவாழ் மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2033/ '11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரன்டம்பேயில் அமைந்துள்ள இளவல் படையணி பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) தற்போது அந்த முகாமில் வசதிகள் வழங்கப்பட்டுள்ள இளவல் படையணிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அந்த முகாமில் ஒரே தடைவையில் தங்கியிருந்து பயிற்சி பெறக்கூடிய இளவல் படையணி மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) அந்த எண்ணிக்கையைத் தாண்டிய மாணவர் எண்ணிக்கையை பங்குகொள்ளச் செய்து பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதா;

(v) இளவல் படையணிப் பயிற்சியைப் பெறக்கூடிய மாணவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லை யாது;

(vi) மேற்படி வயதுக்குக் குறைந்த மாணவர்கள் அந்த முகாம்களில் பயிற்சி பெற்றுள்ளார்களா;

(vii) அவ்வாறெனின் அந்த மாணவர்களை பங்குகொள்ளச் செய்த முகாம்களுக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1656/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எந்துராகல தோட்டத்துக்கு உரித்தான கொட்டகல பெருந்தோட்டக் கம்பனியின் தேயிலை மற்றும் இறப்பர் தொழில்சாலை சுற்றயலில் உள்ள கட்டடங்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையை மீண்டும் திறந்து பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதனை வேறு பயனுள்ள நடவடிக்கைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், எவ்வகையான நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1747/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் கஸினோவை சாதாரண வியாபார நடைமுறையாக ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்;

(ii) இன்றேல், கஸினோ சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சட்டமாக்கப்பட்டு வரிவிதிக்கப்பட்டது ஏன் என்பதையும்;

(iii) கஸினோ மூலம் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2035/ '11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் பிரதிநிதிகள் அல்லாத நபர்களின் பாதுகாப்புக்காக அரச பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவை,

(iii) இவர்களின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களா, அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களா, அல்லது இராணுவ உத்தியோகத்தர்களா;

(iv) மேற்கூறியவாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்டுள்ள பின்தொடர் பாதுகாப்பு வாகனங்களின் ( Backup vehicles) எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எவரேனும் ஒருவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை தீர்மானிக்கின்ற அதிகாரம்வாய்ந்தவர் யார்;

(ii) அத்தகய பாதுகாப்பு வழங்கப்படும் முறையியல் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1657/'11

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 2005-2006 கல்வி ஆண்டு முதல் 2010-2011 கல்வி ஆண்டு வரை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) 2009-2010 மற்றும் 2010-2011 கல்வி ஆண்டுகளில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2009-2010 ஆம் கல்வி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010-2011 கல்வி ஆண்டில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1748/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 இலிருந்து 2011 வரை இலங்கை அரசாங்கம் ஈடுபட்ட சீனக் கருத்திட்டங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) அக் கருத்திட்டங்களின் பெயர்களையும்;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முழுப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் சீன உதவியின் பாவத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு கருத்திட்டத்திலும் வேலைக்கமர்த்துமாறு சீனக் கம்பனியினால் தேவைப்படுத்தப்பட்ட சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(ii) சீனத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சீனக் கம்பனிகளின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குவதற்கான நியாயப்படுத்தல்களையும் வலுவான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2036/ '11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?